# தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## செய்தி வெளியீடு

தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவிக்கை எண்.1/2019-ல், தொகுதி - I ல் அடங்கிய பதவிகளுக்கான அறிவிக்கையினை வெளியிட்டிருந்தது. அதற்கான முதனிலைத் தேர்வு 03.03.2019 அன்று நடைபெறுவதாகவும், முதன்மை எழுத்துத் தேர்வு 2019 மே மாதம் கடைசி வாரத்தில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது

மேலும் மேற்படித் தேர்வின் முதன்மை எழுத்து தேர்விற்கான பாட திட்டம் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்-பட்டிருந்தது.

அதன்படி மேற்படித் தேர்வின் முதன்மை எழுத்து தேர்விற்கான Scheme and Syllabus ஆகியவற்றை தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இணைய தளமான www.tnpsc.gov.in -இல் வெளியிடப்பட்டுள்ளது.

முதன்மைத் தேர்விற்கான பாட திட்டம் மற்றும் தேர்வுத் திட்டம் மாற்றப்பட்டுள்ளதால் தேர்வுக்காக தயாராகும் விண்ணப்பத்தாரர்களுக்கு போதிய கால அவகாசம் தரப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு முதன்மை எழுத்துத் தேர்வு 2019 ஜுலை இரண்டாம் வாரத்தில் நடத்தலாம் என உத்தேசித்துள்ளது.

எனவே விண்ணப்பதாரர்கள் இந்த கால அவகாசத்தை பயன்படுத்தி புதிய தேர்வுத்திட்டம் மற்றும் பாட திட்டத்திற்கு தயாராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : 08.02.2019

க.நந்தகுமார், இ.ஆ.ப.,
செயலாளர்